# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 170 | 4 Pages | 22.1.2024 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 170 | 4 பக்கங்கள் | 22.1.2024 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |

## அடுக்குமாடி குடியிருப்பில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 10 பேர் உயிரிழப்பு



இஸ்ரேல், ஜன.22

டமாஸ்கஸ்இல் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடத்தை குறிவைத்து இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் பத்து பேர் உயிரிழந்தனர். முன்னதாக உயிரிழந்தோர் எண்ணிக்கை 6ஆக இருந்த நிலையில், தற்போது 10ஆக அதிகரித்து இருக்கிறது.

"இஸ்ரேல் நடத்திய ஏவுகணை தாக்குதலில் ஆறு பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் முழுமையாக சேதமுற்றது. பொதுமக்கள் வசித்து வந்த குடியிருப்பு கட்டிடம் தாக்கப்பட்டுள்ளது."

"தாக்குதல் நடத்தப்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மீட்பு பணிகளில் மேலும் சிலரது சடலங்கள் மீட்கப்பட்டன. இதன் காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை 10ஆக அதிகரித்துள்ளது," என சிரியாவில் உள்ள மனித உரிமை ஆணையம் தெரிவித்து இருக்கிறது.

## இன்று பொது விடுமுறை: நீதிமன்றத்தை நாடிய மாணவர்கள்



உத்தர பிரதேசம், ஜன.22

உத்தரபிரதேசமாநிலம்அயோத்தியில்ராமர்கோவில்கட்டப்பட்டுள்ளது. இன்று கும்பாபிஷேகம் நடைபெற இருக்கிறது. இதில் நாட்டின் பல்வேறு பகுதிகளில்இருந்துபிரமுகர்கள்,பக்தர்கள்கலந்தகொள்ளஇருக்கிறார்கள்.

கும்பாபிஷேக விழாவைத் தொடர்ந்து பல்வேறு மாநிலங்களில் பொது விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு அரைநாள் பொது விடுமுறை அளித்துள்ளது.

மகாராஷ்டிரா மாநிலத்திலும் இன்று ராமர் கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு பொதுவிடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பொது விடுமுறையை எதிர்த்து நான்கு சட்டக் கல்லூரி மாணவர்கள் மும்பை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர். இந்த மனுவை உடனடியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தனர். இதனை ஏற்று நீதிமன்றம் நாளை இந்த மனுவை விசாரிக்கிறது.

நான்கு மாணவர்கள் அளித்துள்ள மனுவில், அதிகாரத்தில் இருக்கும் அரசியல் கட்சி அதன் விருப்பத்திற்கு ஏற்ப பொது விடுமுறை அளிக்க முடியாது. மத நிகழ்ச்சியை கொண்டாட பொது விடுமுறை அறிவித்தது அரசியல் சாசனத்தில் கூறப்பட்டுள்ள மதச்சார்பின்மை கொள்கைகளை மீறுவதாகும். ஒரு அரசு எந்த மதத்துடனும் தொடர்பு கொள்ளவோ அல்லது ஊக்குவிக்கவோ முடியாது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த மனுவை குல்கர்னி, நீலா கோகாலே நீதிபதிகள் கொண்ட சிறப்பு பெஞ்ச் விசாரிக்கிறது.

கோவா, மத்திய பிரதேச மாநிலங்களிலும் பொது விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

## "ஒரே நாடு ஒரே தேர்தல் நடத்த ரூ.10 ஆயிரம் கோடி செலவாகும்" தேர்தல் ஆணையம்




டெல்லி, ஜன.22

பாராளுமன்ற மக்களவை, மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது குறித்து மத்திய அரசு பரிசலீத்து வருகிறது. இதற்காக கடந்த ஆண்டு செப்டம்பர் 2 ஆம் தேதி முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தலைமையில் உயர்நிலை குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, சட்ட அமைச்சர் அர்ஜூன் ராம் மேக்வால் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர். தேசிய மற்றும் மாநில கட்சிகளின் பிரதிநிதிகள், சட்ட நிபுணர்கள், பொதுமக்கள் என பல்வேறு தரப்பினர்களிடம் இந்த குழு ஆலோசனைகளை பெற்று வருகிறது.

இதனிடையே, ஒரே நாடு ஒரே தேர்தல் நடத்தப்பட்டால் 15 ஆண்டுகளுக்கு ஒரு முறை 10 ஆயிரம் கோடி ரூபாய் வரை செலவாகும் என இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக தேர்தல் ஆணைய அதிகாரி கூறுகையில், "ஒரே நாடு ஒரே தேர்தல் நடத்தப்பட்டால் புதிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வாங்குவதற்காக 10 ஆயிரம் கோடி ரூபாய் வரை செலவாகும்.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் ஆயுட்காலம் 15 ஆண்டுகள் தான். எனவே மூன்று முறை மட்டுமே அந்த இயந்திரத்தை பயன்படுத்த முடியும். மேலும், ஒரே நாடு ஒரே தேர்தல் என்றால் இரண்டு வகையான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தேவைப்படும்" எனக் கூறினார்.

# புதிய BS6 ரக பேருந்துகள் இயக்கத்தை தொடங்கி வைத்தார்: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்



சென்னை, ஜன.22

தமிழ்நாட்டில் உள்ள ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்களுக்கு இன்றியமையாத போக்குவரத்துச் சேவைகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகங்களின்வாயிலாககுறைந்த கட்டணத்தில் அரசு வழங்கி வருவதோடு, அனைத்து கிராமப் பகுதிகளுக்கும் பேருந்து பயண வசதியை ஏற்படுத்தி மாநிலம் முழுவதும் தடையற்ற போக்குவரத்து சேவையை அளித்து வருகிறது. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவமாணவியர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்கு இலவசபேருந்து பயணச் சலுகை, சாதாரண நகர கட்டண பேருந்துகளில் மகளிர் கட்டணமில்லாமல் பயணம் மேற்கொள்வ தற்காக "விடியல் பயணம்" திட்டம், பொதுமக்களின் தேவைக்கேற்ப புதிய பேருந்து வழித்தடங்களை தொடங்கி வைத்தல், பழைய பேருந்துகளை புதுப்பித்தல், புதிய பேருந்துகளை கொள்முதல் செய்தல், பேருந்து பணிமனைகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 19.10.2022 அன்று சட்டப்பேரவையில் 110விதியின் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், பொதுமக்களின் பேருந்து பயன்பாடு அதிகமான நிலையில், போக்குவரத்துக் கழகங்களை மேம்படுத்திட பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருவதாகவும், 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,000 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்யப்படும் என்றும், அடிச்சட்டம் நல்ல நிலையில் உள்ள 1000 பழைய பேருந்துகள் புதுப்பிக்கப்படும் என்றும் அறிவித்தார். மேலும், 202324ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,000 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்யப்படும் என்றும், அடிச்சட்டம் நல்ல நிலையில் உள்ள 500 பழைய பேருந்துகள் புதுப்பிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அதுமட்டுமின்றி நீலகிரி மாவட்டத்திற்கென மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 16 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்திட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிவிப்புகளின்படி, பொது மக்களின் போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்கின்ற வகையிலும், அரசுப் போக்குவரத்து கழகங்களில் புதிய பேருந்துகளை இயக்கிடும் வகையிலும். 634.99 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக 1666 பி.எஸ்.6 பேருந்துகளை கொள்முதல் செய்து இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதன்முதற்கட்டமாகவிழுப்புரம் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 40 புதிய பேருந்துகளும், கோயம்புத்தூர் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 40 புதிய பேருந்துகளும். கும்பகோணம் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 10 புதிய பேருந்துகளும், திருநெல்வேலி அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 5 புதிய பேருந்துகளும், மதுரை அரசு போக்குவரத்துக்கழகத்திற்கு 5 புதிய பேருந்துகளும், என மொத்தம் 100 புதிய பி.எஸ்.6 பேருந்துகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார். எஞ்சியுள்ள பேருந்துகள் அடுத்த இரண்டு மாதங்களில் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட உள்ளது.

இந்த நிகழ்ச்சியில், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் ஆர். பிரியா, தலைமைச்செயலாளர் சிவ்தாஸ் மீனா, போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர். ஆல்பி ஜான் வர்கீஸ், தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் பொருளாளர் கி. நடராஜன் மற்றும் போக்குவரத்துக் கழகங்களின் மேலாண்மை இயக்குநர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருப்போரூர் கோவிலில் நாள் முழுவதும் அன்னதானத்தை தொடங்கி வைத்த அமைச்சர் சேகர்பாபு



சென்னை, ஜன.22

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தைகிருத்திகையை முன்னிட்டு இன்று (சனிக்கிழமை) திருப்போரூர், கந்தசாமி கோவில் திருமண மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள முருகப் பெருமானின் அறுபடை வீடு அரங்குகளை பார்வையிட்டு, நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியையும், கோவிலில் நாள் முழுவதும் பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சியையும் தொடங்கி வைத்தார்.

பிறகு அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

திருப்போரூர் கந்தசாமி கோவில் சார்பில் கட்டப்பட்டு நீண்ட நாட்கள் திறக்கப்படாமல் இருந்த திருமண மண்டபத்தை இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் திறந்து வைக்கப்பட்டது. மேலும் கோவில் அலுவலகத்திற்கு ரூ.94 லட்சம் மதிப்பீட்டிலான பணிகள் முடிவுறும் நிலை யிலும், ரூ.6.65 கோடி செலவில் புதிய திருமண மண்டபம் கட்டும் பணி தொடங்கப்படும் நிலையிலும், ரூ. 47 லட்ச ரூபாய் செலவில் ஸ்ரீமத் சிதம்பர சாமிகள் மடம் திருக்குளம் புதுப்பிக்கும் பணி நடைபெற்றும் வருகின்றன.

முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான ஆட்சி ஏற்பட்ட பிறகு இறை பசியோடும், வயிற்றுப் பசியோடும் வருபவர்களின் இரண்டு பசியையும் தீர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் 2 கோவில்களில் செயல்படுத்தப்படட முழு நேர அன்னதானத் திட்டம் 8 கோவில்களுக்கு விரிவுபடுத்தப்பட்டதோடு, இந்தாண்டு மேலும் 3 கோவில்களில் முழு நேர அன்னதான திட்டம் விரைவில் தொடங்கி வைக்கப்பட உள்ளது.

அதேபோல ஒருவேளை அன்னதான திட்டத்தில் இந்த ஆட்சி ஏற்பட்டபிறகு 10 கோவில்கள் இணைத்துக்கொள்ளப்பட்டன. இவ்வாண்டு மேலும் 7 கோவில்களுக்கு விரிவுபடுத்தப்பட உள்ளன. இத்திட்டங்களின் மூலம் நாளொன்றுக்கு சராசரியாக 82 ஆயிரம் பக்தர்கள் உணவருந்துகின்றனர்.

இதற்கான ஆண்டு ஒன்றிற்கு 105 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது. கோவில்களின் அன்ன தானம் மற்றும் பிரசாதத்தின் தரத்தினை உறுதிபடுத்தி ஒன்றிய அரசின் தரச்சான்றிதழ்களை இந்தியாவிலேயே அதிகமான எண்ணிக்கையில் தமிழ்நாடுதான் பெற்று உள்ளது.

பழனியில் தைப்பூசம் மற்றும் பங்குனி உத்திரத்திற்கு 20 நாட்கள் நாளொன்றுக்கு 10,000 நபர்கள் வீதம் 2 லட்சம் பக்தர்களுக்கு அன்னதானமும், பழனி கோவில் நடத்தும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் 4000 மாணவ, மாணவியருக்கு காலை சிற்றுண்டியும் வழங்கப்படுகின்றது.

வடலூர் வள்ளலார் கோவிலில் ஒரு நாளைக்கு 10,000 சன்மார்க்க அன்பர்கள் என 3 நாட்களுக்கு 30,000 சன்மார்க்க அன்பர்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி, நெல்லையப்பர் கோவிலில் திருவிழா காலங்களில் 500 நபர்களுக்கும், திருப்பட்டூர் பிரம்மபுரீஸ்வரர் கோவிலில் வியாழக்கிழமை தோறும் 500 நபர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது. இப்படி பல்வேறு நல திட்டங்களால் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை கட்டமைத்து தருகின்ற ஒரு அரசாக திராவிட மாடல் அரசு திகழ்ந்து கொண்டிருக்கின்றது.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு இன்று வரை 1,225 கோவில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றிருக்கின்றது. மேலும் இந்த மாத இறுதிக்குள் 1,316 ஆக இந்த எண்ணிக்கை உயரும். அதே போல் நில மீட்பை பொறுத்த அளவில் ரூ. 5,508 கோடி மதிப்பிலான 6,071 ஏக்கர் நிலத்தை மீட்டிருக்கின்றோம்.

தமிழ் கடவுள் என்று போற்றப்படுகின்றமுருகபெருமான்வீற்றிருக்கும் அறுபடை வீடுகளில் ரூ. 599.50 கோடி மதிப்பீட்டில் 238 பணிகளும், அறுபடை வீடுகள் அல்லாத முருகன் கோவில்களில் ரூ.131.97 கோடி மதிப்பீட்டில் 173 பணிகளும் ஆக மொத்தம் முருகன் கோவில்களில் மட்டும் ரூ.731.47 கோடி மதிப்பீட்டில் 411 பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் இந்தாண்டு முதல் 1000 மூத்த குடிமக்களை அறுபடை வீடுகளுக்கு கட்டணமில்லாமல் அழைத்துச் செல்லும் ஆன்மிகப் பயணத்தின் முதற்கட்ட பயணம் வரும் 28ந்தேதியும், ராமேஸ் வரம் – காசி ஆன்மிகப் பய ணத்தில் இந்தாண்டு 300 நபர்கள் 5 கட்டங்களாகவும் அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.

இந்து சமய அறநிலைத் துறையானது இப்படி பல்வேறு புதிய முயற்சிகளை எடுத்து செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது.

பாம்பன் சுவாமிகளின் மயூர வாகன சேவனத்தின் 100 ஆண்டு விழாவை மிக சிறப்பாக கொண்டாடி, அவரது வாழ்க்கை வரலாற்று சரித்திரத்தை மறுபதிப்பு செய்து வெளியிட்டும், 108 இசைக் கல்லூரி மாணவ, மாணவியர் சண்முக கவசம் மற்றும் குமாரஸ்தவம் ஆகியவற்றை பாராயணம் செய்தும் சிறப்பு செய்தோம். ஆனால் இன்று சிலர் சுத்தமாக இருக்கின்ற கோவில்களையே சுத்தப்படுத்துவது போல மீடியா பப்ளிசிட்டிக்காக செய்து கொண்டிருக்கின்றார்கள்.

அதற்கு கவர்னர் துணை நின்று, சுத்தம் செய்கிறேன் என்று புறப்பட்டு இருக்கின்றார். ஏற்கனவே ஆலயங்கள் அனைத்தும் தூய்மையாக தான் பராமரிக்கப்பட்டு கொண்டிருக்கின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோவிலில் வடகலை, தென்கலை பிரச்சினையை நான் ஏற்கனவே அமைச்சர் என்ற முறையில் இரண்டு முறை அவர்களை அழைத்து தலைமைச்செயலகத்தில் பேச்சுவார்த்தை நடத்தி இருக்கின்றேன். துறையினுடைய செயலாளர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட கலெக்டரும் அழைத்து பேசியிருக்கிறார்கள்.

இந்து சமய அறநிலையத் துறை அலுவலகத்திலும் சுமார் 8 முறை பேச்சு வார்த்தை நடத்தி இருக்கின்றோம். மனது ஒத்துப் போனால் தான் இந்த பிரச்சினைக்கு தீர்வு ஏற்படும்.

இவ்வாறு அமைச்சர் பி. கே.சேகர்பாபு கூறினார்.

இந்நிகழ்ச்சிகளின் போது, செங்கல்பட்டு சார் ஆட்சியர் வி.எஸ். நாராயண சர்மா, இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் கவிதா, காஞ்சிபுரம் மண்டல இணை ஆணையர் வான்மதி, செங்கல்பட்டு உதவி ஆணையர் லட்சுமி காந்த பாரதிதாசன், திருப்போரூர் பேரூராட்சி தலைவர் எம்.தேவராஜ், கோவில் செயல் அலுவலர் கே.குமர வேல் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வாட்ஸ் அப் பயன்படுத்துவோரிடம் ரூ.10 ஆயிரம் கோடியை சுருட்டிய மோசடி கும்பல்

சென்னை, ஜன.22

நாடு முழுவதும் செல்போன்பயன்படுத்துவோர்களில் 40 கோடி பேர் வாட்ஸ் அப்பை பயன்படுத்தி வருகிறார்கள். இந்த வாட்ஸ் அப் செயலி வழியாக பல்வேறு தகவல்கள், புகைப்படங்கள் ஆகியவற்றை நண்பர்கள், உறவினர்களுக்கு அனுப்பி வருகிறார்கள்.

இந்த நிலையில் செல்போன் திரையை அனுப்பி வைக்கும் புதிய வசதி வாட்ஸ் அப்பில் உள்ளது. இதனை பயன்படுத்தி மோசடி பேர்வழிகள் கோடிக்கணக்கில் பணம் சுருட்டி இருப்பது அம்பலமாகி உள்ளது. வெளிநாடுகளில் இருந்து பேசி வாட்ஸ் அப் பயனாளர்களை மயக்கும் இந்த கும்பல் குறுகிய காலத்தில் நீங்கள் பணக்காரர்கள் ஆகிவிடலாம், நாங்கள் அனுப்பும் செயலி மூலமாக முதலீடு செய்தால் போதும், விரைவில் லட்சாதிபதிகளாவும், கோடிசுவர்களாகவும் மாறி விடலாம் என ஆசைவார்த்தை கூறி நம்ப வைக்கிறார்கள்.

இந்த நிலையில் மோசடி கும்பல் வாட்ஸ் அப் திரைககளையும் விட்டு வைக்கவில்லை.

பொதுமக்களிடம் இருந்து வாட்ஸ் அப் திரைகளை அனுப்ப சொல்லி, அதில் உள்ள ரகசிய தகவல்களை மோசடி கும்பல் திருடிய சம்பவம் தற்போது வெளியாகி உள்ளது. சம்பந்தப்பட்ட நபர்களிடம் வாட்ஸ் அப்பில் பேசி அரசு அதிகாரிகள் போல் தங்களை காட்டிக் கொண்டு உயர் பதவிகளில் இருப்பவர்கள் போல் பேசி இந்த மோசடி ஆசாமிகள் பணத்தை வாரி சுருட்டி உள்ளனர்.

வியட்நாம், கென்யா, எத்தியோப்பியா, மலேசியா போன்ற வெளிநாடுகளில் இருந்து மோசடி ஆசாமிகள் நாடு முழுவதும் 10 ஆயிரம் கோடி அளவுக்கு பணத்தை சுருட்டி இருக்கிறார்கள். கடந்த 2021ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் ரூ. 10 ஆயிரத்து 319 கோடி அளவுக்கு வாட்ஸ் அப் பயன்படுவோரிடம் இருந்து வெளிநாட்டு மோசடி கும்பல் பணத்தை சுருட்டி இருக்கிறது.

மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் காவல் துறை ஆய்வு மற்றும் மேம்பாட்டு செயல்பாட்டு மையம் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளது. எனவே வாட்ஸ் அப் பயன்படுத்துவோர்கள் எந்த விஷயங்களை செய்யக்கூடாது என தெரிவித்துள்ளார்கள்.

வெளிநாடுகளில் இருந்து வரும் அழைப்புகளின் எண்களுக்கு முன்னால் பிளஸ் குறியீடு வரும். அதன் பிறகு 84, 63, 24 என்பது போன்ற எண்களில் இருந்து மோசடி அழைப்புகள் வருகின்றன.

இதுபோன்ற அழைப்புகள் வந்தால் பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளாமல் நிராகரிக்க வேண்டும் என மத்திய அமைச்சகம் வேண்டுகோள் விடுத்து ள்ளது. நீண்ட நேரம் வாட்ஸ் அப்பை பயன்படுத்துவோர்களை குறி வைத்து இந்த மோசடி அரங்கேறி இருப்பது தெரிய வந்துள்ளது. எனவே பொதுமக்கள் உஷாராக இருக்க வேண்டும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# எம்.ஜி.ஆர். வளர்ச்சிக்கு கருணாநிதி காரணமாக இருந்தாரா? செல்லூர் ராஜு ஆவேச பேச்சு

மதுரை, ஜன.22

முன்னாள் முதல்அமைச்சர் எம்.ஜி.ஆரின் 107வது பிறந்த நாள் பொதுக்கூட்டம், மதுரை மாநகர் மாவட்டம் மதுரை மேற்கு தொகுதி கழகத்தின் சார்பில், பரவையில் நடைபெற்றது.

கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும், அமைப்புச் செயலாளருமான செல்லூர்ராஜூ கலந்துகொண்டு பேசியதாவது:

எம்.ஜி.ஆர். பாட்டாளி மக்களுக்காக, உழைக்கும் மக்களுக்காக கட்சியை தொடங்கினார். எடப்பாடி யார் இன்றைக்கு கட்சியை சிறப்பாக நடத்தி வருகிறார். அதிக உறுப்பினர்கள் கொண்ட கட்சிகளில் உலக அளவில் 7வது இடத்திலும், இந்திய அளவில் 3வது இடத்திலும், தமிழகத்தில் முதன்மையாக கழகத்தை உருவாக்கியுள்ளார்.

தி.மு.க. ஒன்றும் சங்கர மடம் அல்ல என கருணாநிதி கூறினார். ஆனால் ஸ்டாலினை துணை முதலமைச்சர் மற்றும் செயல் தலைவராக நியமித்தார். அதேபோல் ஸ்டாலினும் நான் வாரிசு அரசியல் செய்யமாட்டேன் என்று கூறினார்.

ஸ்டாலின் வளர்ச்சி அடைய 50 ஆண்டுகள் ஆனது. ஆனால் அவரது மகன் உதயநிதி 5 ஆண்டுகளில் அசுர வளர்ச்சியை எட்டியுள்ளார்.

2019 ஆண்டில் மாநில இளைஞர் அணி செயலாளராக உதயநிதி ஸ்டாலின் நியமிக்கப்பட்டது, 2021ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினரானார்.

2022ம் ஆண்டு அமைச்சர் பட்டியலில் இடம் பிடித்து அமைச்சர் வரிசையில் 10வது இடம் உதயநிதி ஸ்டாலினுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.விற்கு 3 சதவீதம்தான் வித்தியாசம். தற்போது தி.மு.க.விற்கு அரசு ஊழியர்கள் எதிர்ப்பு, சிறு பான்மை மக்களிடத்தில் அ.தி.மு.க. வரவேற்பு ஆகியவற்றால் பாராளுமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றியை அ.தி.மு.க. பெறும். பா.ஜ.க. கனவு பகல் கனவாக தான் போகும்.



புலியைப்பார்த்துபூனை சூடு போட்டு கொண்ட கதையாக, கருணாநிதி நூற்றாண்டு விழாவை ஸ்டாலின் திரைத் துறை மூலம் கொண்டாடினர். அதில் ரஜினி, கமல் உள்ளிட்ட உச்சநட்சத்திரங்கள் பங்கேற்ற போதும் வெறும் ஆயிரம் பேர்தான் அதில் பங்கேற்றனர். இதில் பேசிய உச்சநடிகர் எம்.ஜி.ஆர். வளர்ச்சிக்கு கருணாநிதியின் எழுத்து ஆற்றல் உதவியதாக என்று கூறுகிறார்.

1971ம் ஆண்டு ஒரு விழாவில் முரசொலி மாறன் பேசும்போது நாங்கள் கடன் வாங்கி இருந்தோம், வட்டி கட்ட முடியவில்லை அப்போது எங்களை காப்பாற்ற எங்கள் தங்கம் படத்தில் புரட்சித் தலைவரும், அம்மாவும் இலவசமாக நடித்துக் கொடுத்தனர். மீண்டும் எங்களுக்கு வாழ்வு கொடுத்தவர் 8வது வள்ளல் எம்.ஜி.ஆர். என்று கூறினார்.

அதனை தொடர்ந்து கருணாநிதி பேசும்பொழுது அவர் 8வது வள்ளல் மட்டுமல்ல, திராவிட கர்ணன் என்று பாராட்டி எனக்கு வாழ்வு தந்தவர் புரட்சி தலைவர் என பேசினார். அப்போது முரசொலி கூட வந்தது என்பதை அங்கு பேசிய நடிகர் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# தொழில் அதிபர் வீட்டில் சென்னையில் 2வது நாளாக அமலாக்கத்துறை சோதனை

சென்னை, ஜன.22

பிரபல கட்டுமான நிறுவனத்தின் அதிபராக உள்ளவர் பீட்டர். இவர் சென்னை கோட்டூர்புரத்தில் வசித்து வருகிறார்.

முறைகேடாக பண பரிமாற்ற தடை சட்டத்தின் கீழ் அமலாக்கத்துறையினர் அவர் மீது வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

அதன் அடிப்படையில் பீட்டர் வீட்டில் நேற்று காலையில் இருந்து அமலாக்கத்துறை சோதனை நடந்தது.

பீட்டர் தொடர்புடைய சில இடங்களிலும் சோதனை நடத்தப்பட்டது. சோதனையில் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் குறித்து எதுவும் அமலாக்கத்துறை தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில் இன்று 2வது நாளாக அவரது வீடு மற்றும் அலுவலகங்களில் சோதனை நடந்து வருகிறது.

சோதனையில் 10க்கும் மேற்பட்ட அமலாக்கத்துறை அதிகாரிகள் ஈடுபட்டனர்.

தொழில் அதிபர் பீட்டர் தொடர்பான இடங்களில் சோதனை நடத்தியதில் சில முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அதனை பற்றிய விவரங்களை அமலாக்கத்துறை வெளியிடவில்லை.

இந்த சோதனையின் போது மத்திய தொழில் பாதுகாப்பு படை வீரர்கள் அமலாக்கத்துறை அதிகாரிகளுக்கு பாதுகாப்பாக இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பொது போக்குவரத்து தடையால் ராமேசுவரத்தில் ராஜஸ்தானை சேர்ந்த 1,200 பக்தர்கள் தவிப்பு

ராமேசுவரம், ஜன.22

பிரதமர் மோடி 2 நாள் ஆன்மீகபயணமாக இன்று பிற்பகல் ராமேசுவரம் வருகை தருகிறார். இதையொட்டி போக்குவரத்தில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக ராமநாதபுரத்தில் இருந்து பொது போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது.

அதேபோல் நாளை காலை 6 மணி முதல் மதியம் 12 மணி வரை ராமேசுவரத்தில் அனைத்து விதமான போக்குவரத்துக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இந்த 2 நாட்களும் ராமேசுவரத்தில் கனரக வாகனங்களுக்கு அனுமதி யில்லை. 3,400 போலீசாருடன் 5 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



டிரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. பள்ளிகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டு உள்ளது. இதற்கிடையே ராமேசுவரம் ராமநாத சுவாமி கோவிலுக்கு கடந்த 2 நாட்களில் பல்வேறு வெளி மாநிலங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் வந்திருந்தனர். அவர்களில் ராஜஸ்தானை சேர்ந்த 1,200 பக்தர்கள் ஆன்மீக சுற்றுலாவாக நேற்று முன்தினம் சிறப்பு ரெயில் மூலம் மதுரை வந்து, அங்கிருந்து பேருந்துகளில் ராமேசுவரம் வந்தனர்.

அவர்கள் மீண்டும் மதுரைக்கு திரும்பவேண்டிய நிலையில், பிரதமர் மோடி வருகையால் போக்குவரத்து தடைபட்டுள்ளதால் தவித்து வருகிறார்கள். 50க்கும் மேற்பட்ட விடுதிகளில் தங்கியிருந்த அவர்கள் இன்று காலி செய்த நிலையில் எங்கு செல்வது என்று தெரியாமல் ஒரே இடத்தில் குவிந்துள்ளனர்.

பிரதமர் மோடி பிற்பகலில் ராமேசுவரம் வந்தபிறகு மாலை 4 மணிக்கு மேல் போக்குவரத்து சரிசெய்யப்பட்டு, ராஜஸ்தான் மாநில பக்தர்கள் பத்திரமாக மதுரைக்கு பேருந்துகளில் அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று சுற்றுலா நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தை மாதத்தின் வளர்பிறை முகூர்த்தம்: பூ மார்க்கெட்டில் மல்லிகை கிலோ ரூ.4000

திண்டுக்கல், ஜன.22

திண்டுக்கல் அண்ணா வணிக வளாகத்தில் ஒருங்கிணைந்த பூ மார்க்கெட் செயல்பட்டு வருகிறது. இங்கு திண்டுக்கல் புறநகர் பகுதிகளான பல்வேறு கிராமங்களில் இருந்து பூக்கள் விற்பனைக்கு கொண்டுவரப்படுகிறது.

பின்னர் இங்கிருந்து வியாபாரிகள் அதனை வாங்கிச்சென்று விற்பனை செய்து வருகின்றனர். கடந்த மாதம் மார்கழி என்பதால் எந்தவித திருமணம் உள்ளிட்ட விஷேச நிகழ்ச்சிகளும் நடைபெறவில்லை. மேலும் பரவலாக பெய்த மழை மற்றும் கடும் பனிப்பொழிவு காரணமாக பூக்களின் வரத்தும் குறைந்து காணப்பட்டது.



இந்நிலையில் ஒரு மாதத்திற்கு பின்பு நாளை தை மாதத்தின் முதல் வளர்பிறை முகூர்த்த நாள் வருகிறது. நாளை திருமணம் உள்ளிட்ட பல்வேறு விஷேச நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளநிலையில் பூக்களின் தேவை அதிகரித்துள்ளது.

திண்டுக்கல் பூ மார்க்கெட்டில் இன்று 30 கிலோ மல்லிகை மட்டுமே விற்பனைக்கு வந்தது. இதனால் ஒரு கிலோ மல்லிகை ரூ.4000க்கு விற்பனையானது. இதே போல் முல்லைப்பூ ரூ.1800, ஜாதிப்பூ ரூ.1300, காக்கரட்டான் ரூ.1300, சம்பங்கி ரூ.300, அரளி ரூ.150, செவ்வந்தி ரூ.200, செண்டுமல்லி ரூ.70, கோழிக்கொண்டை ரூ.130, பட்டன்ரோஸ் ரூ.200, பன்னீர்ரோஸ் ரூ.150 என விற்பனையானது.

வழக்கமாக மார்க்கெட்டுக்கு வரும் பூக்களில் பாதிஅளவு கூட இன்று விற்பனைக்கு வராததால் விலை கடுமையாக உயர்ந்துள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்தனர். அடுத்தடுத்து முகூர்த்த நாட்கள் வர உள்ள நிலையில் பூக்களின் விலையேற்றம் சாமானிய மக்களை அதிர்ச்சி அடைய வைத்தள்ளது.


# கேலோ தொடக்கவிழா: பிரதமர் மோடி முன்னிலையில் மேற்கத்திய இசையில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடுவதா? அண்ணாமலை

சென்னை, ஜன.22

தமிழக பா.ஜனதா தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள எக்ஸ் வலைதள பதிவில் கூறி இருப்பதாவது:

கடந்த 2021ம் ஆண்டு டிசம்பர் மாதம், தமிழ்த்தாய் வாழ்த்து பாடலை மாநிலப் பாடலாக தி.மு.க. அரசு அறிவித்ததோடு, பாடலை 55 வினாடிகளில், முல்லைப் பாணி (மோகன) ராகத்தில் பாட வேண்டும் என்பன உள்ளிட்ட வழிகாட்டு நெறிமுறைகளையும் வெளியிட்டிருந்தது.

ஆனால் நேற்றைய தினம், கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் தொடக்க விழாவில், தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை சுமார் 90 வினாடிகள் பாடியதோடு மட்டுமல்லாமல், மேற்கத்திய இசை வடிவில் பாடியது வன்மையான கண்டனத்துக்குரியது.




விளம்பர அரசியலுக்காக அறிவிப்புகள் வெளியிட்டுவிட்டு, பின்னர் அவற்றைப் பின்பற்ற முடியாமல் தாங்களே அவற்றை மீறுவது தி.மு.க.வின் வழக்கமாகி இருக்கிறது.

பிரதமர் மோடி பங்கேற்ற விழாவில், மேற்கத்திய இசைவடிவில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடுவது, தமிழ்க் கலாச்சாரத்தை அழிக்க தி.மு.க. செய்யும் மற்றுமொரு முயற்சியாகவே கருதப்படும்.

இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், தமிழ்த்தாய் வாழ்த்து பாடலை மாநிலப் பாடலாக திமுக அரசு அறிவித்ததோடு, பாடலை 55 வினாடிகளில், முல்லைப்பாணி (மோகன) ராகத்தில் பாட வேண்டும் என்பன உள்ளிட்ட வழிகாட்டு நெறிமுறைகளையும் வெளியிட்டிருந்தது.

# வலம்புரி விளை குப்பை கிடங்கில் பயங்கர தீ விபத்து: புகை மூட்டத்தால் குழந்தைகள், பெரியவர்கள் அவதி

நாகர்கோவில், ஜன.22

நாகர்கோவில் பீச் ரோடு பகுதியில் வலம்புரிவிளை குப்பை கிடங்கு உள்ளது. மாநகர பகுதியில் சேகரிக்கப்படும் குப்பைகள் இங்கு கொட்டப்பட்டு வருகிறது. இதனால் குப்பைகள் மலை போல் குவிந்து கிடக்கின்றன.

நாகர்கோவில் நகரின் மையப்பகுதியில் உள்ள இந்தக் குப்பை கிடங்கை மாற்ற வேண்டும் என்று அதன் சுற்றுவட்டார பகுதி மக்கள் கோரிக்கைவிடுத்து வருகிறார்கள். தேர்தல் நேரங்களில் அரசியல் கட்சியினர் பலரும் குப்பை கிடங்கை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று வாக்குறுதி அளித்து வருகிறார்கள்.

ஆனால் இதுவரை குப்பை கிடங்கு மாற்றப்படவில்லை. இந்த குப்பை கிடங்கில் குப்பைகள் மலை போல் தேங்கி கிடப்பதால் அவ்வப்போது தீ விபத்து ஏற்படுவது வாடிக்கையாகிவிட்டது. இன்று அதிகாலையில் வலம்புரி விளை குப்பை கிடங்கில் இருந்து புகை மண்டலம் வந்தது. இதை பார்த்த அங்கு பணியில் இருந்த ஊழியர்கள், மாநகராட்சி அதிகாரிகளுக்கும், நாகர்கோவில் தீயணைப்பு நிலையத்திற்கும் தகவல் தெரிவித்தனர்.

அதன்பேரில் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். அதற்குள் தீ மளமளவென்று பரவி கொழுந்து விட்டு எரிந்தது. அதனை தீயணைப்பு வீரர்கள் அணைக்க முயன்றனர். ஆனால் தீயை கட்டுப்படுத்த முடியவில்லை. தீ வேகமாக பரவியதால் அந்த பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சியளித்தது.

காற்றும் வீசியதால் அந்த பகுதியை சுற்றியுள்ள குடியிருப்புகளை புகை மண்டலம் சூழ்ந்தது. இதனால் அங்கு வசிக்கும் மக்கள் அவதிக்குள்ளானார்கள். நேரம் செல்ல செல்ல புகை அதிகரித்து இருளப்பபுரத்திலிருந்து பீச் ரோடு வரும் சாலை முழுவதும் புகை மண்டலமாக காட்சியளித்தது.



அந்த பகுதி வழியாக வாகனங்கள் வர முடியாத நிலை ஏற்பட்டது. எதிரே வரும் வாகனங்கள் தெரியாத அளவிற்கு இருந்ததால் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு ஆளானார்கள். இந்நிலையில் தக்கலையில் இருந்தும் தீயணைப்பு வாகனம் வரவழைக்கப்பட்டது. தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்க தற்பொழுது போராடி வருகிறார்கள். ஜே..சி.பி. எந்திரம் மூலமாக குப்பைகள் கிளறப்பட்டு தீயை அணைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

தீ விபத்து பற்றி தகவல் அறிந்ததும் மாநகராட்சி மேயர் மகேஷ் மற்றும் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டனர். தீயை கட்டுப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

இது குறித்து அந்த பகுதி மக்கள் கூறுகையில், நாகர்கோவில் மாநகரப் பகுதியில் சேகரிக்கப்படும் குப்பைகள் தொடர்ந்து வலம்புரி விளை குப்பை கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது. குப்பை கிடங்கில் இருந்து துர்நாற்றமும் வீசுவதால் அந்த பகுதியில் உள்ள மக்கள் மூக்கை பிடித்து கொண்டு வாழ வேண்டிய நிலை உள்ளது. குப்பை கிடங்கை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று அனைத்து கட்சியினரும் தெரிவித்து வருகிறார்கள். ஆனால் இது வரை நடவடிக்கை எடுக்கவில்லை.

இதனால் இந்த பகுதியைச்சேர்ந்த முதியவர்கள், குழந்தைகள் அனைவரும் பாதிக்கப்பட்டு உள்ளனர். அவர்களுக்கு மூச்சு திணறலும் ஏற்பட்டு வருகிறது. இதற்கு நிரந்தர தீர்வாக குப்பை கிடங்கை மாற்றுவதைத் தவிர வேறு வழி இல்லை. மாநகராட்சி நிர்வாகம் உடனடியாக குப்பை கிடங்கை மாற்றாவிட்டால் போராட்டம் நடத்தப்படும் என்றனர்.

# சதுரகிரி சுந்தரமகாலிங்கம் கோவிலுக்கு செல்ல பக்தர்களுக்கு அனுமதி

வத்திராயிருப்பு, ஜன.22

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு அருகே மேற்கு தொடர்ச்சி மலையில் சதுரகிரி சுந்தர மகாலிங்கம் கோவில் அமைந்துள்ளது. அமாவாசை மற்றும் பவுர்ணமி தினங்களை யொட்டி தலா மூன்று நாட்களும், பிரதோஷத்திற்கு இரண்டு நாட்களும் என மாதத்திற்கு 8 நாட்கள் பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்.

கடந்த இரண்டு மாதங்களாக கனமழை பெய்ததின் காரணமாக பிலாவடி கருப்பசாமி கோவில் ஓடை, சங்கிலி பாறை ஓடை, எலும்பு ஓடை, மாங்கனி ஓடை உள்ளிட்ட ஓடைகளில் நீர்வரத்து அதிகரித்து வந்தது. அதோடு பிரதோஷம், பவுர்ணமி, அமாவாசை, உள்ளிட்ட விசேஷ நாட்களின் போது மட்டும் கனமழை பெய்து வந்ததால் பக்தர்கள் நலன் கருதி கோவிலுக்கு செல்ல வனத்துறை அனுமதிக்கவில்லை.

இதில் மார்கழி 1ந்தேதி மட்டும் நீதிமன்ற உத்தரவுப்படி பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். அதன் பின்னர் மழை காரணமாக அனுமதிக்கப்படவில்லை. தற்போதைய நிலையில் கோவிலுக்கு செல்லும் ஓடைகளில் நீர்வரத்து குறைந்துள்ளது.

வருகிற 23ந்தேதி தை மாத பிரதோஷ விழா நடைபெற உள்ளது. எனவே அன்று மாலையில் சுந்தர மகாலிங்க சுவாமிக்கு பால், பழம், பன்னீர், இளநீர் உள்ளிட்ட 21 வகையான அபிஷேகங்கள் நடைபெற உள்ளது. அபிஷேகம் முடிந்ததும் சாமி அலங்கரிக்கப்பட்டு சிறப்பு பூஜை நடைபெறுகிறது.

25ந்தேதி தை மாத பவுர்ணமி தினத்துடன், அன்றைய தினம் தைப்பூசம் என்பதால் சுந்தர மகாலிங்கம் சாமிக்கு பால், பழம் உள்ளிட்ட 21 வகையான அபிஷேகம் நடைபெறுகிறது. பின்னர் அபிஷேகம் முடிந்ததும் சாமி அலங்கரிக்கப்பட்டு சிறப்பு பூஜை நடைபெற உள்ளது. 26ந்தேதியுடன் நான்கு நாட்கள் அனுமதி முடிவடைய உள்ளது.

தைப்பிரதோஷம் மற்றும் பவுர்ணமிக்கு பக்தர்கள் தமிழகம் மட்டுமல்லாமல் பிற மாநிலங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏனென்றால் கடந்த இரண்டு மாதங்களாக மழையின் காரணமாக பக்தர்கள் அனுமதிக்கப்படாததால் பக்தர்கள் கூட்டம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இந்த 4 நாட்களிலும் காலை 6 மணி முதல் 12 மணி வரை மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்.


அதோடு பத்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களை அழைத்து வருவதை தவிர்க்க வேண்டும். சளி, இருமல், காய்ச்சல் உள்ளவர்கள் வருவதை தவிர்க்க வேண்டும். இரவில் தங்குவதற்கு அனுமதி கிடையாது, ஓடைகளில் இறங்கி குளிக்க கூடாது, பாலித்தீன் மற்றும் எளிதில் தீப்பற்ற கூடிய பொருட்களை கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதாக வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சுந்தர மகாலிங்கம் கோவில் பரம்பரை அறங்காவலர் ராஜா என்ற பெரிய சாமி, செயல் அலுவலர் ராமகிருஷ்ணன் ஆகியோர் செய்துள்ளனர். மழை பெய்தால் அனுமதி மறுக்கப்படும் எனவும் வனத்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 7 ஆடுகளை கொன்று அட்டகாசம்: சிறுத்தையை கூண்டு வைத்து பிடிக்க வனத்துறையினர் முடிவு

சத்தியமங்கலம், ஜன.22

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பக பகுதியில் மொத்தம் 10 வனச்சரகங்கள் உள்ளன. இங்கு யானை, சிறுத்தை, புலி, மான், காட்டு எருமை, கரடி உள்பட பல்வேறு வனவிலங்குகள் வசித்து வருகின்றன. இதில் சிறுத்தைகள் அவ்வப்போது வனப்பகுதியை விட்டு வெளியேறி கிராமத்துக்குள் புகுந்து கால்நடைகளை வேட்டையாடி வருவது தொடர்கதையாகி வருகிறது.



இந்நிலையில் பவானி சாகர் வனப்பகுதியில் இருந்து கடந்த 15ந் தேதி வனப்பகுதியை விட்டு வெளியேறிய சிறுத்தை ராஜன் நகர் அருகே காந்தி நகர் கிராமத்தில் சுப்புராஜ் என்பவர் தோட்டத்தில் புகுந்து 3 ஆடுகளை கடித்துக் கொன்றது. வனத்துறையினர் சம்பவ இடத்துக்கு சென்று ஆய்வு செய்தபோது கால் தடயங்களை வைத்து அது சிறுத்தை உடையது என வனத்துறையினர் உறுதி செய்தனர்.

இந்த பரபரப்பு அடங்குவதற்குள் மீண்டும் ராஜன் நகரில் வெள்ளியங்கிரி என்பவர் தோட்டத்தில் புகுந்த சிறுத்தை 4 ஆடுகளை அடித்துக் கொன்றது. கிட்டத்தட்ட 2 நாட்களில் 7 ஆடுகளை சிறுத்தை கொன்றுள்ளதால் அப்பகுதி விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பீதி அடைந்துள்ளனர்.

இதுகுறித்து வனத்துறையினர் கூறும்போது, சிறுத்தை நடமாட்டம் உள்ள பகுதியில் முதற்கட்டமாக தானியங்கி கேமிரா பொருத்தப்பட்டுள்ளது. கேமிரா பதிவுகளை கண்காணித்த பின் சிறுத்தையை கூண்டு வைத்து பிடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சிறுத்தை நடமாட்டம் உள்ளதால் இரவு நேரத்தில் மக்கள் வெளியே நடமாட வேண்டாம். அடர்ந்த வனப்பகுதிக்குள் கால்நடைகளை மேய்க்க அழைத்துச் செல்ல வேண்டாம் என்ன வலியுறுத்தி உள்ளனர். மேலும் சிறுத்தை உறுமல் சத்தம், கால்நடைகள் அலறல் சத்தம் கேட்டால் உடனடியாக வனத்துறையினருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்றனர்.

# தமிழ்நாட்டில் முக்கிய துறைகளை சேர்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பணியிடமாற்றம்

சென்னை, ஜன.22

தமிழக அரசின் தலைமைச்செயலாளர் சிவ்தாஸ் மீனா வெளியிட்ட அரசாணையில் கூறியிருப்பதாவது:

வேளாண்மை கமிஷனர் எல். சுப்பிரமணியன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளராக மாற்றப்பட்டுள்ளார்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர் ஜெயஸ்ரீ முரளிதரன், சமூக நலன் மற்றும் மகளிர் மேம்பாட்டுத்துறை செயலாளராக மாற்றப்பட்டுள்ளார்.

நில நிர்வாக கமிஷனர் எஸ்.நாகராஜன் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளராக பொறுப்பு ஏற்பார். மனித வள மேலாண்மை துறையில் செயலாளராகவும் முழு கூடுதல் பொறுப்பு வகிப்பார்.

மீன்வள கமிஷனர் மற்றும் தமிழ்நாடு மீன்வள மேம்பாட்டு கழகத்தின் மேலாண்மை இயக்குனர் கே.எஸ்.பழனிசாமி, நில நிர்வாக கமிஷனராக மாற்றப்பட்டுள்ளார்.

சமூக நலன் மற்றும் மகளிர் மேம்பாட்டுத்துறை முதன்மை செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, மீன் வள கமிஷனராக பதவியேற்பார். தமிழ்நாடு மீன்வள மேம்பாட்டு கழகத்தின் மேலாண்மை இயக்குனராகவும் செயல்படுவார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் ஆர். செல்வராஜ், தமிழ்நாடு சாலை பிரிவு 2ம் திட்டத்தின் திட்ட இயக்குனராக நியமிக்கப்படுகிறார். சென்னை கன்னியாகுமரி தொழில் வழிச்சாலையின் திட்ட இயக்குனராகவும் முழு கூடுதல் பொறுப்பு வகிப்பார். மேலும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனராக அலுவல் சாரா பொறுப்பு வகிப்பார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பாதிரியார் இல்லத்தில் அரசு போக்குவரத்து கழக ஊழியர் அடித்துக்கொலை: குமரியில் பயங்கரம்

குமரி, ஜன.22

குமரி மாவட்டம் திங்கள்சந்தை அருகே உள்ள மைலோடு மடத்துவிளை பகுதியைச் சேர்ந்தவர் சேவியர்குமார் (வயது 42). இவர் கன்னியாகுமரி அரசு போக்குவரத்துக்கழக பணிமனையில் மெக்கானிக்காக பணியாற்றி வந்தார். நாம் தமிழர் கட்சியின் தக்கலை ஒன்றிய தலைவராகவும் இருந்தார். இதுதவிர மைலோடு கிறிஸ்தவ ஆலய பங்குப் பேரவையில் முன்னாள் பொருளாளராகவும் பணியாற்றியுள்ளார். இவருடைய மனைவி ஜெமிலா (40). இவர் மைலோடு ஆலய நிர்வாகத்துக்கு உட்பட்ட தனியார் பள்ளியில் ஆசிரியையாக பணியாற்றி வருகிறார்.





மைலோடு ஆலய பாதிரியாராக இருப்பவர் ராபின்சன். இவர் பங்குப் பேரவை தலைவரும் ஆவார். தற்போதுள்ள பங்கு பேரவை தரப்பினருக்கும், ஏற்கனவே பங்கு பேரவை நிர்வாகியாக இருந்த சேவியர் குமார் தரப்புக்கும் இடையே நிர்வாக ரீதியாக அடிக்கடி தகராறு இருந்து வந்துள்ளது. இதுதொடர்பாக இரணியல் போலீஸ்நிலையத்தில் இருதரப்பினரும் மாறி, மாறி புகார் அளித்துள்ளனர். மேலும் பங்கு பேரவை நிர்வாக கணக்கு, வழக்குகள் தொடர்பாக சேவியர்குமார் அடிக்கடி கேட்பது வழக்கம். இந்த பிரச்சினை தொடர்பாக வாட்ஸ்அப், முகநூல் போன்ற சமூக வலைத்தளங்களிலும் அவர் தற்போதைய பங்கு பேரவை நிர்வாகத்துக்கு எதிரான கருத்துகளை பதிவிட்டு வந்துள்ளார்.

இதற்கிடையே சேவியர் குமாரின் மனைவி ஜெமிலாவை பள்ளி நிர்வாகம் பணியிடை நீக்கம் செய்ததாக தெரிகிறது. எனினும் ஜெமிலா மீண்டும் பணியில் சேர முயற்சி மேற்கொண்டார். இதனால் நேற்று முன்தினம் இரவு ஜெமிலா தனது உறவினர்கள் சிலருடன் பாதிரியார் ராபின்சனை அவரது இல்லத்தில் சந்தித்து பேசியுள்ளார்.

அப்போது தனது கணவர் இனி இதுபோன்று சமூக வலைத்தளங்களில் எதுவும் பதிவிட மாட்டார் என்றும், மன்னிப்பு வழங்கி ஆசிரியர் பணி மீண்டும் வழங்கும்படி கூறியுள்ளார். அதற்கு ராபின்சன், சேவியர்குமார் நேரில் வந்து எழுத்துப்பூர்வமாக மன்னிப்பு கேட்டால் வேலை வழங்குவதாக கூறியதாக தெரிகிறது.

இந்தநிலையில் நேற்று மதியம் சேவியர்குமார் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தார். அப்போது அவரது வீட்டிற்கு வந்த மைலோடைச் சேர்ந்த வின்சென்ட், பாதிரியாரிடம் எழுத்து பூர்வமாக மன்னிப்பு கேட்டால் மனைவிக்கு வேலை கிடைக்க ஏற்பாடு செய்வதாக கூறியுள்ளார். இதையடுத்து சேவியர்குமார் மைலோடு ஆலய வளாகத்தில் உள்ள பாதிரியார் இல்லத்திற்கு சென்றார். அங்கு பாதிரியார் ராபின்சன் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடந்ததாக தெரிகிறது. இதில் தற்போதைய பங்குப்பேரவை நிர்வாகிகள் சிலரும், தி.மு.க. நிர்வாகி ஒருவரும் பங்கேற்றதாக கூறப்படுகிறது.

இதற்கிடையே ஆலய வளாகத்தில் உள்ள பாதிரியார் இல்லத்தில் சேவியர் குமார் ரத்த காயங்களுடன் பிணமாக கிடப்பதாக ஜெமிலாவுக்கு தகவல் கிடைத்தது. இதனை கேட்டு அதிர்ச்சி அடைந்த அவர் உறவினர்களுடன் பதற்றத்துடன் ஓடி வந்தார். பாதிரியார் இல்லத்தில் கொலை செய்யப்பட்ட நிலையில் கிடந்த சேவியர் குமார் உடலை கண்டு கதறி அழுதார்.

பாதிரியார் இல்லத்தில் சேவியர் குமார் பிணமாக கிடந்த சம்பவம் அங்கு காட்டுத் தீயாய் பரவியது. சேவியர்குமாரின் உறவினர்களும், நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்தவர்களும் அங்கு திரண்டனர். இதனால் அங்கு திடீர் பரபரப்பும், பதற்றமும் ஏற்பட்டது. இதற்கிடையே குளச்சல் உதவி சூப்பிரண்டு பிரவீன் கவுதம், தக்கலை துணை சூப்பிரண்டு உதயசூரியன், இரணியல் இன்ஸ்பெக்டர் (பொறுப்பு) பெருமாள், தக்கலை இன்ஸ்பெக்டர் ராமச்சந்திரன், இரணியல் சப் இன்ஸ்பெக்டர் முத்துகிருஷ்ணன் உள்ளிட்ட போலீசாரும் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து விசாரணை நடத்தினர்.

அப்போது இஸ்திரி பெட்டியால் தலையில் அடித்து சேவியர் குமார் கொல்லப்பட்டது தெரிய வந்தது. மேலும் அந்த அறையில் ஆங்காங்கே பொருட்கள் சிதறி கிடந்ததால் பேச்சுவார்த்தையின் போது தள்ளுமுள்ளு ஏற்பட்டிருக்கலாம் என்றும், இந்த மோதலில் சேவியர் குமார் அடித்துக் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்தது. இதற்கிடையே பேச்சுவார்தையில் ஈடுபட்ட பாதிரியார், தி.மு.க. நிர்வாகி, பங்கு பேரவை நிர்வாகிகள் தலைமறைவாகி விட்டனர்.

இதையடுத்து ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு சேவியர்குமார் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்ல போலீசார் ஏற்பாடு செய்தனர். ஆனால் இதற்கு எதிர்ப்பு தெரிவித்த சேவியர்குமார் உறவினர்கள் மற்றும் நாம் தமிழர் கட்சியினர் போலீசாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

குற்றவாளிகளை உடனடியாக கைது செய்தால் தான் உடலை எடுக்க விடுவோம் எனக்கூறி கோஷங்களை எழுப்பினர். இதனால் அங்கு மேலும் பதற்றம் உருவானது. இரவு 12.30 மணி வரையும் உடலை எடுக்க விடாமல் போராட்டம் நடத்தப்பட்டது. இதனால் கூடுதல் போலீசார் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு பணியும் பலப்படுத்தப்பட்டது. இந்த கொலை சம்பவம் குமரி மாவட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# திமுக இளைஞரணி மாநாடு: பிரமாண்ட டிரோன் நிகழ்ச்சியில் வானில் ஜொலித்த தலைவர்களின் படங்கள்

சேலம், ஜன.22

சேலம் பெத்தநாயக்கன் பாளையத்தில் திமுக இளைஞரணி மாநாடு நடைபெற உள்ளது. இதையடுத்து மாநாடு நடைபெறும் இடத்தில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார். அவருடன் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், துர்கா ஸ்டாலின் மற்றும் மூத்த நிர்வாகிகள் இருந்தனர்.



இதையடுத்து சென்னையில் தொடங்கிய திமுக இளைஞரணியின் மாநாட்டு சுடரொளி ஓட்டம் இன்று சேலத்தை வந்தடைந்ததை அடுத்து முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் சுடரை ஏற்றி வைத்தார். இதையடுத்து 1500 பேர் பங்கேற்ற நீட் எதிர்ப்பு இருசக்கர வாகன பேரணியையும் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இதையடுத்து சுமார் 1500 டிரோன்கள் மூலம் தமிழ்நாடு, திமுக தலைவர்களின் படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. இந்த டிரோன் நிகழ்ச்சியை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கண்டு களித்தார். அவருடன் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் மற்றும் மூத்த உறுப்பினர்கள் உடன் இருந்தனர்.

# உணவில் முடி இருப்பதாக கூறி தகராறில் ஈடுபட்ட வாடிக்கையாளர்: சிசிடிவி காட்சியால் அம்பலமான நாடகம்

திருவள்ளூர், ஜன.22

பூந்தமல்லி அருகே சாப்பிட்ட உணவில் முடி இருந்ததாக கூறி வாடிக்கையாளர் பணம் கொடுக்காமல் சென்ற நிலையில் அவர் ஆடிய தில்லுமுல்லு நாடகம் அம்பலமாகியுள்ளது.



திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லியில் உள்ள லட்சுமிபுரம் சாலையில் வடமாநில இளைஞர்கள் உணவகம் நடத்தி வருகின்றனர்.

இங்கு வந்த வாடிக்கையாளர் ஒருவர், சிக்கன் ரைஸ், சிக்கன் லாலி பாப் உள்ளிட்டவற்றை ஆர்டர் செய்து சாப்பிட்டுள்ளார். சிறிது நேரத்தில் உணவில் முடி இருப்பதாக கூறி அவர் தகராறில் ஈடுபட்டதோடு உணவுக்கு பணம் தரமாட்டேன் என்றும் அடம் பிடித்துள்ளார்.

இதையடுத்து உணவக ஊழியர்களும் வேறு வழியின்றி அவரிடம் பணம் வாங்காமல் அனுப்பி வைத்துள்ளனர்.

சிறிது நேரம் கழித்து உணவக ஊழியர்கள் சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்தபோது, தன்னுடைய முடியையே பிடிங்கி உணவில் மறைத்து வைத்து அந்த நபர் நாடகமாடியது அம்பலமாகியுள்ளது. இந்த காட்சி சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது.

# அரசு பள்ளி சத்துணவு பெண் ஊழியர் கட்டையால் தாக்கி கொலை

திண்டுக்கல், ஜன.22

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூரில் அரசு பள்ளி சத்துணவு பெண் ஊழியரை கட்டையால் தாக்கி கொலை செய்த சம்பவத்தில் மகளின் கள்ளக்காதலனை போலீசார் கைது செய்தனர். காமராஜர் நகரைச் சேர்ந்த சத்துணவு ஊழியர் நாகராணி என்பவர் தனது வீட்டின் பின்புறம் இரத்த காயங்களுடன் சடலமாக கிடந்தார்.

தகவலின் பேரில் வந்த போலீசார் உடலை கைப்பற்றி பிரத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டதில், கொலை செய்யப்பட்ட நாகராணியின் மகள் மாசிலாமணி, முருகேசன் என்பவருடன் தகாத உறவில் இருந்து வந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில் மாசிலாமணி திடீரென பேச மறுத்ததால், ஆத்திரமடைந்த முருகேசன் அவரது வீட்டுக்கு சென்றுள்ளார்.

அப்போது அங்கு தனியாக இருந்த நாகராணியை மரக்கட்டையால் தலையில் தாக்கி கொலை செய்தது தெரிய வந்தது.

இதனை தொடர்ந்து போலீசார் அவரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# குடியரசு தின விழாவை முன்னிட்டு சென்னை விமான நிலையத்தில் 5 அடுக்கு பாதுகாப்பு

மீனம்பாக்கம், ஜன.22

குடியரசு தின விழா வருகிற 26ந் தேதி நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது. குடியரசு தின விழா கொண்டாட்டங்களைசீர்குலைக்க சதித்திட்டம் தீட்டி இருப்பதாக மத்திய உளவுத்துறைக்கு தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து மத்திய உள்துறை அமைச்சகம் நாடு முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகரித்து உள்ளது. அதன்படி நாடு முழுவதும் உள்ள விமான நிலையங்கள், வழிபாட்டு தளங்கள், மக்கள் அதிகமாக கூடும் முக்கியமான ரெயில், பஸ் நிலையங்கள் போன்ற பகுதிகளில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளன.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திலும் பாதுகாப்பு ஏற்பாடு அதிகரிக்கப்பட்டு 5 அடுக்கு பாதுகாப்பு முறை அமல்படுத்தப்பட்டு உள்ளது. விமான நிலையத்துக்கு வரும் வாகனங்களை, பன்னாட்டு மற்றும் உள்நாட்டு புறப்பாடு, வருகை பகுதி வளாகங்கள் அருகே நிறுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது.




இருசக்கர வாகனங்களை அடுக்குமாடி நிறுத்துமிடத்தில் நிறுத்த நடவடிக்கை எடுக்க விமான பாதுகாப்பு அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர். விமான நிலைய கார் பார்க்கிங் பகுதியில் நீண்ட நாட்களாக நிற்கும் வாகனங்களை தீவிரமாக சோதனை செய்யவும் உத்தரவிடப்பட்டு உள்ளது. மத்திய தொழில் பாதுகாப்பு படையினரின் அதிரடி வீரர்கள் மோப்ப நாய்களுடன் சென்னை விமான நிலையத்தில் விமானங்கள் நிற்கும் பகுதிகளிலும் தீவிரமாக சோதனை செய்து கண்காணிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர். சென்னை விமான நிலையத்தில் பார்வையாளர்கள் வருகைக்கான தடை ஏற்கனவே கடந்த 2 ஆண்டுகளாக தொடர்ச்சியாக அமலில் இருப்பதால் அதை மேலும் தீவிரமாக செயல்படுத்துகின்றனர். பாஸ்கள் வழங்குவதிலும் கடுமையான கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டு உள்ளன. வருகிற 30ந் தேதி வரை முக்கிய பிரமுகர்களுக்கான பாஸ் வழங்கதடை செய்யப்பட்டு உள்ளது. சென்னை விமான நிலையம் முழுவதும் முழு பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

வரும் 30ந் தேதி நள்ளிரவு வரை இந்த பாதுகாப்பு விதிமுறைகள் அமலில் இருக்கும்.

தற்போது 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ள நிலையில் குடியரசு தின விழா நெருங்கும்போது பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்படும் என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தகராறில் ஆட்டோ டிரைவரை கத்தியால் குத்திக் கொலை

திண்டுக்கல், ஜன.22

திண்டுக்கல் அருகே நிலத்தை பங்கு பிரிப்பதில் ஏற்பட்ட தகராறில் ஆட்டோ டிரைவரை கத்தியால் குத்திக் கொலை செய்த உறவினர்கள் நான்கு பேரை போலீசார் கைது செய்தனர். வேடசந்தூர் அருகே உள்ள தீத்தாகவுண்டன்பட்டியை சேர்ந்த கருப்பசாமி என்ற ஆட்டோ டிரைவருக்கு அதே பகுதியில் ஒரு ஏக்கர் ஐந்து சென்ட் நிலம் உள்ளது. அந்த நிலத்தை பங்குபிரித்து தரக்கூறி அவரது உறவினர் வெள்ளைச்சாமியின் குடும்பத்தினர் கருப்பசாமிடம் தகராறு செய்து வந்துள்ளனர்.

இதனால் இரு குடும்பத்தினருக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது.

இந்த நிலையி கருப்பசாமி, அவரது சகோதரர் பண்ணைக்காரன் மற்றும் அண்ணன் மகன் மகாராஜன் ஆகிய மூன்று பேரை வெள்ளைச்சாமி கத்தியால் குத்தியுள்ளார். இதில் சம்பவ இடத்திலேயே கருப்பசாமி உயிரிழந்த நிலையில், படுகாயம் அடைந்த மற்ற இருவரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக, வழக்குப்பதிவு செய்த போலீசார் வெள்ளைச்சாமி, அவரது மனைவி தங்கம் மற்றும் மகன்கள் முனியப்பன், பார்த்தசாரதி ஆகிய நான்கு பேரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 33 பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு ரூ.5.61 இலட்சம் மதிப்பிலான காதொலிக்கருவிகள்: மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்

திருப்பூர், ஜன.22

மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக் கூட்ட ரங்கில் 33 பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு ரூ.5,61,000/ மதிப்பிலான காதொலிக்கருவிகளை வழங்கினார்கள்.

திருப்பூர் மாவட்டத்திற்கு உட்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 2,355 மாற்றுத்திறன் மாணவர்கள் பயின்று வருகின்றனர். இதில் 214 மாணவர்கள் செவித்திறன் குறைபாடு உடையவர்கள்.

பள்ளிக்கல்வித்துறை சார்பில் நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி திட்டத்தின் கீழ் இந்தியா தொண்டு நிறுவனம் மற்றும் வீ கார்டு (V Guard) நிறுவனம் இணைந்து 14 ஊராட்சி ஒன்றியங்களிலும் 123 பள்ளிகளில் உள்ள மாணவர்களை பரிசோதித்து காதொலிக்கருவி தேவைப்படும் 60 மாணவர்களை கண்டறிந்து முதல் தவணையாக செவித்திறன் பாதிக்கப்பட்ட 33 மாணவர்களுக்கு தலா ரூ.17,000/ வீதம் ரூ.5,61,000/ மதிப்பிலான காதொலிக்கருவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் நா.கீதா, மாவட்ட உதவி திட்ட அலுவலர் இலி.அண்ணாதுரை, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பாலசுந்தரி, இந்தியா தொண்டு நிறுவனம் மற்றும் வீ கார்டு நிறுவன நிர்வாகிகள் உடனிருந்தனர்.

Title-Code:-TNTAM215.1.
R.Dis No:- 968/2023



# டெல்லி காவல்துறைக்கு நன்றி தெரிவித்த நடிகை ராஷ்மிகா மந்தனா

கடந்தசிலமாதங்களுக்குமுன்பு 'டீப்பேக்' எனப்படும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நடிகை ராஷ்மிகா மந்தனாவின் முகத்தை வேறொரு பெண்ணின் உடலோடு பொருத்தி, அதனை சிலர் வீடியோவாக வெளியிட்டிருந்தனர். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது.

இதுகுறித்துராஷ்மிகாமந்தனாவும்தனதுவேதனையை வெளிப்படுத்தியிருந்தார். இதைத் தொடர்ந்து 'டீப்பேக்' தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பல பிரபலங்களின் போலி வீடியோக்கள் வெளியாகி வந்தன. இதுபோன்ற போலி வீடியோக்களை வெளியிட்டால் மூன்று ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படும் என மத்திய அரசு எச்சரிக்கை விடுத்தது.

இதனிடையே, ராஷ்மிகா மந்தனா முகத்தை பயன்படுத்தி போலி வீடியோ வெளியிட்ட நபரை டெல்லி போலீசார் கைது செய்துள்ளனர். ஆந்திர பிரதேசத்தைச் சேர்ந்த ஈமானி நவீன்(24) என்ற நபரை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தியதில், இன்ஸ்டாகிராமில் அதிமான பாலோயர்களை பெறுவதற்காக நடிகை ராஷ்மிகாவின் போலி வீடியோவை வெளியிட்டதாக அவர் ஒப்புக்கொண்டார்.

இந்த நிலையில், போலி வீடியோ வெளியிட்ட நபரை கைது செய்த டெல்லி காவல்துறைக்கு நடிகை ராஷ்மிகா மந்தனா நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "கைது நடவடிக்கை மேற்கொண்ட டெல்லி காவல்துறைக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னைஅன்புடனும், ஆதரவுடனும்அரவணைக்கும் சமூகத்திற்கு உண்மையிலேயே நன்றியுள்ளவளாக உணர்கிறேன். பெண்கள் மற்றும் சிறுவர்களே, உங்கள் அனுமதியின்றி உங்கள் படம் பயன்படுத்தப்பட்டாலோ அல்லது மார்பிங் செய்யப்பட்டாலோ, அது தவறு!

உங்களுக்கு ஆதரவளிக்கும் நபர்களால் நீங்கள் சூழப் பட்டிருப்பட்டிருக்கிறீர்கள் என்பதையும், நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நினைவூட்டுவதாக இந்த சம்பவம் இருக்கும் என்று நம்புகிறேன்."

இவ்வாறு ராஷ்மிகா மந்தனா தெரிவித்துள்ளார்.

# அரசியலில் ஈடுபட போகிறேனா? நடிகர் அர்ஜூன்



பிரதமரை என்னுடைய கோவிலுக்கு வருமாறு அழைப்பு விடுத்தேன் என்று நடிகர் அர்ஜூன் கூறினார்.

சென்னையில் நடந்த 18 வயதுக்குட்பட்டோருக்கான கேலோ இந்தியா விளையாட்டு போட்டிகளை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். இந்த விழாவில் கவர்னர் ஆர்.என்.ரவி, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

விழாமுடிந்ததும், கவர்னர்மாளிகையில் ஓய்வெடுத்த பிரதமர், அங்கு சில முக்கிய பிரமுகர்களையும் சந்தித்தார். அந்தவகையில் நடிகர் அர்ஜூனும், பிரதமரை சந்தித்து பேசி சென்றார்.

இந்த சந்திப்பை தொடர்ந்து அர்ஜூன் பா.ஜனதாவில் இணைந்துவிட்டதாகவும், அரசியலில் தீவிரமாக ஈடுபட போவதாகவும்பேசப்பட்டது. இது பெரும்பரபரப்பை ஏற்படுத்தியது. இதற்குஅர்ஜூன்விளக்கம்அளித்துள்ளார்.

அதில், பிரதமரை என்னுடைய கோவிலுக்கு வருமாறு அழைப்பு விடுத்தேன். விரைவில் வருவதாக கூறினார். இது ஒரு சாதாரண சந்திப்புதான். எங்கள் குடும்பத்தினருக்கு பிடித்த மனிதர். அவர் சென்னைக்கு வந்ததால் சந்திக்க அனுமதி கேட்டோம். அனுமதி கிடைத்ததால் வந்து சந்தித்தேன்.

மற்றபடி நான் பா.ஜனதாவில் இணைந்து விட்டதாக சொல்லப்படும் தகவல்களில் உண்மை இல்லை. எனக்கு அரசியல் சுத்தமாக தெரியாது. இது ஒரு மரியாதை நிமித்தமான சந்திப்பு மட்டுமே, என்று அர்ஜூன் கூறியுள்ளார்.

இதன்மூலம் வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

# ராமர் கோவிலுக்கு துர்புத்தி உள்ள சிலர் வரவில்லை: நடிகை கங்கனா ரணாவத்



பாலிவுட் திரையுலகின் முன்னணி நடிகையான கங்கனா ரனாவத், ஜெயம் ரவி நடிப்பில் வெளியான 'தாம் தூம்' படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானார். அதன்பின்னர் மறைந்த முதல்அமைச்சர் ஜெ.ஜெயலலிதா வாழ்க்கை வரலாறாக உருவாகி வெளியான 'தலைவி' படத்தில் நடித்து ரசிகர்களை கவர்ந்தார்.

இவர் நடிப்பில் கடந்த ஆண்டு தமிழில் 'சந்திரமுகி 2' திரைப்படமும் மற்றும் இந்தியில் 'தேஜஸ்' திரைப்படமும் வெளியாகின. இரண்டு படங்களும் எதிர்மறையான விமர்சனங்களை பெற்று தோல்வியை சந்தித்தது. கடந்த ஆண்டு 'மணிகர்ணிகா பிலிம்ஸ்' நிறுவனம் சார்பில் இவர் தயாரித்த டிக்கு வெட்ஸ் சிரு திரைப்படமும் மோசமான விமர்சனங்களையே பெற்றது.

சமூக வலைதளங்களில் எப்போதும் ஆக்டிவ் ஆக இருக்கும் கங்கனா அவ்வப்போது சர்ச்சை கருத்தை சொல்லி பரபரப்பை ஏற்படுத்துவார். இந்நிலையில் உத்தர பிரதேச மாநிலம் அயோத்தியில் கட்டப்பட்டுள்ள ராமர் கோவிலின் கும்பாபிஷேக விழா நாளை மறுநாள் நடைபெற உள்ளது. இந்த விழாவில் பிரதமர் மோடி உள்பட பல முக்கிய தலைவர்கள், திரைப்பிரபலங்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

இந்த விழாவில் பங்கேற்க நடிகை கங்கனா ரணாவத்திற்கும் அழைப்பு விடுக்கப்பட்டு உள்ளது. இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், 'அயோத்தி ராமர் கோவிலுக்கு வருகை தரும் மக்கள், நிறைய புண்ணியங்களைப் பெறுகிறார்கள். வாடிகன் நகரத்திற்கு உலக அளவில் முக்கியத்துவம் உள்ளதைப் போல, அயோத்தி ராமர் கோவிலும் நமக்கு முக்கியமானது. அயோத்திக்கு வந்து ராமரை வழிபடுவது நமக்கு கிடைத்த பாக்கியம். ராமரின் கோவிலுக்கு 'துர்புத்தி' உள்ள சிலர் வரவில்லை. ஜனவரி 22ந் தேதி 'ராமராஜ்யம்' மீண்டும் நிறுவப்படும்' என்று தெரிவித்துள்ளார்.

# 'சேர்ந்து நடிக்க ஆசை இருந்தா சொல்லு' விஜயகாந்த் மகனுக்கு விஷால் கொடுத்த வாக்குறுதி

தே.மு.தி.க. தலைவரும், நடிகருமான விஜயகாந்த் கடந்த 28ந்தேதி மரணம் அடைந்தார். அவரது உடல் சென்னை கோயம்பேட்டில் உள்ள தே.மு.தி.க. அலுவலக வளாகத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது. தற்போது, அவரது நினைவிடத்திற்கு திரையுலக பிரபலங்கள், அரசியல் கட்சி தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் தினமும் வந்து அஞ்சலி செலுத்தி செல்கின்றனர்.

இந்நிலையில் நடிகர்சங்கம் சார்பில் நடிகர் விஜயகாந்த் மறைவுக்கு இரங்கல் கூட்டம் சென்னை காமராஜர் அரங்கத்தில் சமீபத்தில் நடைபெற்றது. இந்த இரங்கல் கூட்டத்தில் முன்னணி நடிகர்கள், இயக்குனர்கள், தயாரிப்பாளர்கள் என பலரும் பங்கேற்று விஜயகாந்த் குறித்து தங்களது நினைவுகளை பகிர்ந்துகொண்டனர்

இதில் நடிகர் சங்கத்தின் பொதுச்செயலாளர் விஷால் கலந்து கொண்டார். விழாவில் பேசிய அவர், 'வாய்ப்பு தேடிக்கொண்டிருந்த உதவி இயக்குனர்களுக்கு உணவளித்தவர். உணவில் எந்த பாரபட்சமும் பார்க்ககூடாது என எங்களைப்போன்ற இளைஞர்களுக்கு ஊக்கமாக திகழ்ந்தவர் விஜயகாந்த். அவர் பாதையில் நாங்களும் அந்த முயற்சியில் ஈடுபட்டோம்.

பல நடிகர்கள் வளர வாய்ப்புக் கொடுத்தவர் விஜயகாந்த். அந்த வகையில் சண்முக பாண்டியனிடம் ஒன்றைமட்டும் சொல்லிக்கொள்கிறேன். உன்னுடைய படத்தில் எப்போதாவது நானும் சேர்ந்து நடிக்க வேண்டும் என ஆசை இருந்தால் சொல்லு நான் வருகிறேன். என்னை பயன்படுத்திக்கொள்ள உனக்கு விருப்பம் இருந்தால் நானும் உன்னுடன் தூணாக இருந்து படத்தில் நடித்து தருகிறேன். அதை என் பரிகாரமா நான் நினைத்துக் கொள்கிறேன்.' என்றார்.



# கபடி கபடி....பாகிஸ்தான் வீரரை கலாய்த்த ஷிகர் தவான்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள்கொண்ட டி20 தொடரில்விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் 4 போட்டிகளிலும் தோல்வியடைந்த பாகிஸ்தான் அணி தொடரை ஏற்கனவே இழந்துவிட்டது.

முன்னதாக இந்த தொடரின் 3வது போட்டியில் வேடிக்கையான நிகழ்வு ஒன்று நடைபெற்றது. இந்த போட்டியின்போது பாகிஸ்தான் வீரர் முகமது ரிஸ்வான் பந்தை அடித்துவிட்டு ரன் எடுக்க ஓடினார். அப்போது அவர்தடுமாறி கையிலிருந்த பேட்டை தவற விட்டு விட்டு தன்னுடைய கையால் கிரீஸ் கோட்டை தொட்டு 2 ரன்கள் எடுத்தார். ஆனால் டிவி ரீப்ளேயில் அவர் சரியாக கிரீஸ் கோட்டை தொடவில்லை என தெரியவந்தது. இதனால் ஷார்ட் ரன் முறையில் ஒரு ரன் குறைக்கப்பட்டது.

கிரிஸ் கோட்டை கை விரல்களால் ரிஸ்வான் தொட முயற்சித்த புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலானது.

இந்நிலையில் இந்த புகைப்படத்தை பார்த்த இந்திய கிரிக்கெட் வீரர் ஷிகர்தவான் அதனை தனது எக்ஸ் பக்கத்தில் 'கபடிகபடிகபடி' என்றதலைப்புடன்ரிஸ்வானைகலாய்த்துபதிவிட்டுள்ளார். இந்தபதிவுதற்போதுரசிகர்களிடையே வைரலாகி வருகிறது.

# 'விராட் கோலி 100 சதங்கள் அடிக்க வேண்டும்' சோயப் அக்தர் விருப்பம்



பாகிஸ்தான்கிரிக்கெட் அணியின்முன்னாள்பந்துவீச்சாளர் சோயப் அக்தர், துபாயில் நடைபெற்று வரும் ஐ.எல். டி20 கிரிக்கெட் தொடரின் வர்ணனையாளராகவும், அந்த போட்டியின் விளம்பர தூதராகவும் பங்காற்றி வருகிறார். இந்த நிலையில் செய்தி நிறுவனம் ஒன்றிற்கு சோயப் அக்தர் பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது;

"விராட் கோலி எங்கள் காலத்தில் விளையாடியிருந்தால் மிகச்சிறந்த போட்டியாக இருந்திருப்பார். சில சிரமங்களை அவர் எதிர்கொண்டிருக்கலாம், ஆனால் அவர் இப்போது அடித்த ரன்களை நிச்சயம் எடுத்திருப்பார். அதே சமயம் வாசிம் அக்ரமின் பந்துவீச்சை எதிர்கொள்வது எளிதல்ல.

இருப்பினும் விராட் கோலி இந்த காலகட்டத்தின் தலைசிறந்த பேட்ஸ்மேன். இரண்டு காலங்களையும் ஒப்பிட முடியாது. அவர் நூறு சதங்கள் அடிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்."

இவ்வாறு சோயப் அக்தர் தெரிவித்தார்.

# ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்; நம்பர் 1 வீராங்கனை அதிர்ச்சி தோல்வி..!



ஆண்டின் முதல் 'கிராண்ட்ஸ்லாம்' போட்டியான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் மெல்போர்னில் நடைபெற்று வருகிறது. பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இந்த போட்டி, வருகிற 28ந்தேதி வரை நடக்கவுள்ளது. தொடர் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது.

இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற 3வது சுற்று ஆட்டம் ஒன்றில் தரவரிசையில் நம்பர் 1 வீராங்கனையும் '4 கிராண்ட்ஸ்லாம்' பட்டம் வென்றவருமான இகா ஸ்வியாடெக் (போலந்து), தரவரிசையில் 50வது இடத்தில் உள்ள 19 வயது வீராங்கனையான லிண்டா நோஸ்கோவாவை (செக்குடியரசு) எதிர்கொண்டார்.

இதில் முதல் செட்டை இழந்த லிண்டா நோஸ்கோவா சரிவில் இருந்து மீண்டு அடுத்த 2 செட்களிலும் அபாரமாக செயல்பட்டு 36, 63, 64 என்ற செட் கணக்கில் ஸ்வியாடெக்கை வீழ்த்தி அசத்தினார். 2 மணி நேரம் 20 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இகா ஸ்வியாடெக் அதிர்ச்சி தோல்வியடைந்து ஆஸ்திரேலிய ஓபனில் இருந்து வெளியேறினார்.

இதில் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் முன்னாள் 'நம்பர் ஒன்' வீராங்கனையான விக்டோரியா அஸரென்கா (பெலாரஸ்) 61, 75 என்ற நேர்செட்டில் ஜெலினா ஆஸ்டாபென்கோவை (லாத்வியா) வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார். மற்ற ஆட்டங்களில் எலினா ஸ்விடோலினா (உக்ரைன்), கின்வென் செங் (சீனா), டயானா யாஸ்ட்ரிம்ஸ்கா (உக்ரைன்), அன்னா கலின்ஸ்கயா (ரஷியா), ஜாஸ்மின் பாலினி (இத்தாலி), ஓசியன் டோடின் (பிரான்ஸ்) ஆகியோரும் வெற்றி பெற்றனர்.

# கேலோ இந்தியா போட்டியில் முதல் தங்கப்பதக்கத்தை தமிழகம் வென்றது



6வது கேலோஇந்தியாஇளைஞர்விளையாட்டுபோட்டி (18வயதுக்குஉட்பட்டோர்) சென்னைநேருஸ்டேடியத்தில் நேற்று முன்தினம் கோலாகலமாக தொடங்கியது. பிரதமர் மோடி போட்டியை தொடங்கி வைத்தார்.

சென்னை, கோவை, திருச்சி, மதுரை ஆகிய நகரங்களில் வருகிற 31ந் தேதி வரை நடைபெறும் இந்த விளையாட்டு திருவிழாவில் தடகளம், கபடி, நீச்சல், கால்பந்து, ஆக்கி, கூடைப்பந்து, ஜிம்னாஸ்டிக்ஸ், ஸ்குவாஷ் உள்பட 26 வகையான போட்டிகள் இடம் பெறுகின்றன. இதில் 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 5,630 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

இந்த போட்டி தொடரில் முதல் தங்கப்பதக்கத்தை தமிழகம் கைப்பற்றி அசத்தியது. 2வது நாளான நேற்று சென்னை எழும்பூரில் உள்ள ராஜரத்தினம் ஸ்டேடியத்தில் நடந்த யோகாசன போட்டியின் 'ரித்மிக்' ஆண்கள் இரட்டையர் பிரிவில் தமிழகத்தை சேர்ந்த இரட்டை சகோதரர்களான தேவேஷ்சர்வேஷ் 127.89 புள்ளிகள் குவித்து தங்கப்பதக்கத்தை அறுவடை செய்தனர். இருவரும் காஞ்சீபுரத்தில் உள்ள அரசு பள்ளியில் 7ம் வகுப்பு படித்து வருகிறார்கள். மேற்குவங்காளத்தின்அவ்ரஜிட்சாஹாநில்சர்கார்ஜோடி 127.57 புள்ளிகளுடன்வெள்ளிப்பதக்கமும், மராட்டியத்தின் குஷ் சரண் இங்கோலேயாட்நேஷ் ரவீந்திரா வான்கடே இணை 127.20 புள்ளிகளுடன் வெண்கலப்பதக்கமும் பெற்றனர்.

சென்னையை அடுத்த மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் நடைபெறும் வாள்வீச்சு போட்டியில் ஆண்களுக்கான தனிநபர் 'எபீ' பிரிவின் இறுதி சுற்றில் தமிழக வீரர் அன்பிளஸ் கோவின் 1511 என்ற புள்ளி கணக்கில் மணிப்பூரை சேர்ந்த ஜெனித்தை வீழ்த்தி தங்கப்பதக்கத்தை முத்தமிட்டார். தமிழகம் வென்ற 2வது தங்கம் இதுவாகும். தோல்வி கண்ட ஜெனித் வெள்ளிப்பதக்கமும், அரைஇறுதியில் தோற்ற அரியானாவின் தேவராஜ், பஞ்சாப்பின் அஸ்வினி சவ்ரியா வெண்கலப்பதக்கமும் பெற்றனர்.

பெண்கள் கபடி போட்டியில் 'ஏ' பிரிவில் இடம் பிடித்துள்ள தமிழக அணி தனது 3வது மற்றும் கடைசி லீக் ஆட்டத்தில் 4132 என்ற புள்ளி கணக்கில் மராட்டியத்தை வீழ்த்தி அரைஇறுதிக்கு முன்னேறியது. இதேபோல் ஆண்கள் கபடி போட்டியில் 'பி' பிரிவில் அங்கம் வகிக்கும் தமிழக அணி தனது கடைசி லீக் ஆட்டத்தில் 3936 என்ற புள்ளி கணக்கில் டெல்லியை சாய்த்து அரைஇறுதியை எட்டியது.

# இந்தியா ஓபன் பேட்மிண்டன்: இறுதிப் போட்டிக்கு முன்னேறிய சாத்விக் சிராக் ஜோடி



இந்திய ஓபன் சர்வதேச பேட்மிண்டன் போட்டி டெல்லியில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரைஇறுதி ஆட்டம் ஒன்றில் உலக தரவரிசையில் 9வது இடத்தில் இருக்கும் இந்திய வீரர் எச்.எஸ். பிரனாய் 1521, 521 என்ற நேர் செட்டில் 2ம் நிலை வீரரான சி யு கியிடம் (சீனா) வீழ்ந்தார்.

ஆண்கள் இரட்டையர் பிரிவின் அரைஇறுதியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் ரங்கி ரெட்டிசிராக் ஷெட்டி இணை 2118, 2114 என்ற நேர்செட்டில் மலேசியாவின் ஆரோன் சியாசோக் வூய் யிக் ஜோடியை தோற்கடித்து இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.



ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து

விளக்கம்:

மற்றவரை அறநெறியில் ஒழுகச்செய்து தானும்அறம் தவறாத இல்வாழ்க்கை, தவம் செய்வாரைவிட மிகச்சிறந்த வல்லமை உடைய வாழ்க்கையாகும்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.